# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

மானியக் கோரிக்கை எண். 9

## அறிவிப்புகள்
## 2026 – 2027


**வே. சம்பத் குமார்**

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2026

## 1. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 14 கல்லூரி மாணவ, மாணவியர்கள் சமூகநீதி விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ மாணவியர்களின் பாதுகாப்பு, நலன் மற்றும் தரமான தங்குமிட வசதியை உறுதி செய்யும் நோக்கில், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், செங்கல்பட்டு, வேலூர், கடலூர், விருதுநகர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், கரூர், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள 14 சமூகநீதி கல்லூரி விடுதிகளுக்கு, பல்வேறு அடிப்படை வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் தமிழ்நாடு மாணவர் தங்கும் விடுதி மற்றும் உட்கட்டமைப்பு நிறுவனம் (TNSHIC) மூலம் கட்டப்படும்.

இந்த புதிய விடுதிகளில் பாதுகாப்பான தங்குமிடங்கள், சுத்தமான குடிநீர், நவீன சமையலறை, உணவுக்கூடம், படிப்பறைகள், இணைய வசதி, நூலகம் உள்ளிட்ட மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

2. சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் 1,238 சமூகநீதி பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு கொசுவலை பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 1,238 சமூகநீதி பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான வாழ்விடச் சூழலை உறுதி செய்யும் நோக்கில், விடுதிகளில் உள்ள அனைத்து ஜன்னல்களுக்கும் ரூபாய் 26 கோடியே 85 இலட்சத்து 15 ஆயிரம் மதிப்பீட்டில் தரமான கொசுவலைகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம் கொசுக்களினால் பரவும் நோய்களிலிருந்து மாணாக்கர்களை பாதுகாத்து, சுகாதாரமான ஆரோக்கியமான விடுதி சூழலை உருவாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

## 3. 960 சமூகநீதி விடுதிகளுக்கு இன்வெர்ட்டர் (Inverter), குளிர்சாதனப் பெட்டி (Refrigerator) மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு கருவிகள் (Water Purifiers) வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 960 சமூகநீதி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு அடிப்படை வசதிகளை உறுதிசெய்யும் நோக்கில், 20 கல்லூரி விடுதிகளுக்கு இன்வெர்ட்டர் (Inverter), குளிர்சாதனப் பெட்டி (Refrigerator) மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு கருவிகளும் (Water Purifiers), 940 பள்ளி விடுதிகளுக்கு இன்வெர்ட்டர் (Inverter) மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு கருவிகளும் (Water Purifiers) வழங்கப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த ரூபாய் 25 கோடியே 76 இலட்சத்து 50 ஆயிரம் செலவினம் ஆகும்.

இந்தத் திட்டத்தின் மூலம், மின்தடை ஏற்படும் நேர்வுகளில் மாணாக்கர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருப்பதுடன், பாதுகாப்பான குடிநீர் மற்றும் உணவுப் பொருட்களை

சுகாதாரமான முறையில் பராமரிக்கும் வசதியும் உறுதி செய்யப்படும். இதன் மூலம் சமூகநீதி விடுதிகளின் தரம் மேலும் உயர்த்தப்பட்டு, மாணாக்கர்கள் ஆரோக்கியமான மற்றும் வசதியான சூழலில் கல்வி பயிலும் நிலை உருவாக்கப்படும்.

4. சமூகநீதி பள்ளி விடுதிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 35,000 மாணாக்கர்களுக்கு ஆங்கில பேச்சாற்றல் (Spoken English) பயிற்சி மற்றும் பயிற்சிப் பொருட்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (T N S D C ) மூலம் வழங்கப்படும்.

உலகளாவிய கல்வி மற்றும் வேலை வாய்ப்புச் சூழலுக்கு மாணாக்கர்களை தயார்படுத்தும் நோக்கில், சமூகநீதி பள்ளி விடுதிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 35,000 மாணவ, மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றல் (Spoken English) பயிற்சி மற்றும் அதற்குத் தேவையான பயிற்சிப் பொருட்கள் (Training Materials) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Skill Development Corporation) மூலம் வழங்கப்படும்.

இப்பயிற்சித் திட்டத்தின் மூலம் மாணாக்கர்கள் அனைவரும் ஆங்கிலத்தில் பேசும் திறன், தன்னம்பிக்கை, தகவல் பரிமாற்றத் திறன் பெற்று போட்டித் தேர்வுகள், உயர்கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றிற்கு தேவையான

மொழித் திறன்கள் பெற்று தங்களை மேம்படுத்திக் கொள்வர். அனுபவமிக்க பயிற்றுநர்கள் மூலம் நடைமுறை சார்ந்த வகுப்புகள் நடத்தப்பட்டு, மாணாக்கர்கள் உலகத் தரத்திற்கு இணையான தகவல் தொடர்புத் திறன்களைப் பெற வழிவகை செய்யப்படும்.

5. 95 சமூகநீதி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு மாணவ, மாணவியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் சமூகநீதி மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கர்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி கற்கும் சூழலை உறுதி செய்யும் நோக்கில், 95 சமூகநீதி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு ரூபாய் 12 கோடியே 61 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர்கள் அமைக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் விடுதிகளின் பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டு, அந்நியர்கள் அத்துமீறி நுழைவது தடுக்கப்படுவதுடன், மாணாக்கர்கள் பாதுகாப்பான மற்றும் நிம்மதியான சூழலில் தங்கி கல்வி பயிலும் வசதி உறுதி செய்யப்படும்.

**6. 29 சமூகநீதி பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்தப்பட்டு உயர்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு போதிய விடுதி வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் சமூகநீதி பள்ளி விடுதிகளில், மாணவர் சேர்க்கை குறைவாக உள்ள 29 பள்ளி விடுதிகள், கல்லூரி மாணவ, மாணவியரின் தங்குமிடத்திற்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூபாய் 6 கோடியே 44 இலட்சத்து 42 ஆயிரம் மதிப்பீட்டில் கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் ஏற்கனவே உள்ள உட்கட்டமைப்பு திறம்பட பயன்படுத்தப்படுவதுடன், கல்லூரி மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர தரமான, பாதுகாப்பான மற்றும் வசதியான விடுதி வசதிகள் உருவாக்கப்படும். மேலும், உயர்கல்வி பயிலும் சமூகநீதி விடுதி மாணாக்கர்களுக்கு கூடுதல் தங்குமிட வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

## 7. 517 சமூகநீதி மாணவியர் விடுதிகளில் தற்காப்புக் கலைப் பயிற்சிக்கான சீருடைகள் மற்றும் பயிற்சிப் பொருட்கள் வழங்கப்படும்.

ஒவ்வொரு மாணவியும் சிங்கப்பெண்ணாக அச்சமின்றி, தன்னம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் வாழும் சமுதாயத்தை உருவாக்குவதே இந்த அரசின் உறுதியான இலட்சியம். கல்வியுடன் தற்காப்புத் திறனையும் மாணவியர்கள் கற்றுக் கொள்ளும் வகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 517 சமூகநீதி மாணவியர் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 28,000 மாணவியரின் பாதுகாப்பு, தன்னம்பிக்கை மற்றும் உடற்திறனை மேம்படுத்தும் நோக்கில், தற்காப்புக்கலைப் பயிற்சிக்குத் தேவையான சீருடைகள் மற்றும் பயிற்சிப் பொருட்கள் ரூபாய் 2 கோடியே 52 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் அனைத்து மாணவியர்களுக்கும் தரமான தற்காப்புக் கலைப் பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டு, அவர்களின் தற்காப்புத் திறன், உடல் ஆரோக்கியம் மற்றும் மன உறுதி மேம்படுத்தப்படும்.

8. சமூகநீதி விடுதி மாணவ, மாணவியர்களுக்கான கலைத் திருவிழா நிகழ்ச்சித் தொகை ரூபாய் 10,000/- லிருந்து ரூபாய் 20,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

சமூகநீதி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் கலை, இலக்கியம் மற்றும் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில், ஆண்டுதோறும் நடத்தப்படும் கலைத்திருவிழா மற்றும் திறன் மேம்பாட்டு போட்டிகளுக்கான தொகை உயர்த்தி வழங்கப்படும்.

இதன்படி மாணவ, மாணவியர்களுக்கான போட்டிகள் நடத்துதல், வெற்றி பெறும் மாணவர்களுக்கு பதக்கம், பாராட்டு சான்றிதழ் மற்றும் கோப்பைகள் வழங்குதல் உள்ளிட்ட செலவுகளுக்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கப்படும் தொகை ரூபாய் 10,000/-லிருந்து ரூபாய் 20,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் சமூகநீதி விடுதி மாணவர்களின் படைப்பாற்றல், கலைத்திறன், விளையாட்டுத் திறன் மற்றும் தன்னம்பிக்கை மேலும் வளர்க்கப்பட்டு, அவர்களின் முழுமையான ஆளுமை மேம்பாட்டிற்கு வழிவகை செய்யப்படும். இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ரூபாய் 3 இலட்சத்து 80 ஆயிரம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

9. சமூகநீதி விடுதிகளில் பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணம் ரூபாய் 1,400/–லிருந்து ரூபாய் 1,800/– ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணம் ரூபாய் 1,500/– லிருந்து ரூபாய் 2,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

சமூகநீதி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப்படியை உயர்த்தி வழங்குவதன் மூலம், மாணவர்களுக்கு தரமான மற்றும் சத்தான உணவு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

இதன்படி, தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உணவுக் கட்டணம் பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணம் ரூபாய் 1,400/ –லிருந்து ரூபாய் 1,800/– ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணம் ரூபாய் 1,500/ –லிருந்து ரூபாய் 2,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

தற்போதுள்ள விலைவாசி உயர்வு, காய்கறிகள், மளிகை பொருட்கள், எரிவாயு ஆகியவற்றின் தற்போதைய விலை நிலவரங்களை கணக்கில் கொண்டு இத்திட்டத்திற்காக கூடுதலாக ரூபாய் 32 கோடியே 53 இலட்சத்து 11 ஆயிரம் செலவில் மேற்கண்டவாறு உணவுக் கட்டணங்கள் உயர்த்தி வழங்கப்படும்.

10. சமூகநீதி பள்ளி விடுதிகளுக்கான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நிதி ரூபாய் 50,000/- லிருந்து அதிகபட்சமாக ரூபாய் 75,000/- ஆகவும் கல்லூரி விடுதிகளுக்கான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நிதி ரூபாய் 50,000/- லிருந்து அதிகபட்சமாக ரூபாய் 1,00,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் சமூகநீதி பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு பாதுகாப்பான, சுத்தமான மற்றும் தரமான விடுதிச் சூழலை உறுதி செய்யும் நோக்கில், பள்ளி விடுதிகளுக்கான ஆண்டு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நிதி ரூபாய் 50,000/- லிருந்து அதிகபட்சமாக ரூபாய் 75,000/- ஆகவும், கல்லூரி விடுதிகளுக்கான ஆண்டு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு நிதி ரூபாய் 50,000/- லிருந்து அதிகபட்சமாக ரூபாய் 1,00,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

இந்த நிதியின் மூலம் விடுதிகளில் மேற்கூரை, கதவுகள், ஜன்னல்கள், மின்சார வசதிகள், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள், கழிப்பறைகள், சமையலறை, மாணவர் அறைகள் மற்றும் இதர அத்தியாவசிய உள் கட்டமைப்புகளை உடனுக்குடன் பராமரித்து, சிறிய பழுதுபார்ப்புப் பணிகளை தாமதமின்றி மேற்கொள்ள வழிவகை செய்யப்படும். இதனால் அரசுக்கு ஆண்டுக்கு மொத்தம் ரூபாய் 4 கோடியே 2 இலட்சத்து 25 ஆயிரம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**11. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் விதமாக நவீன சிகைதிருத்தும் அழகுநிலையம் (MODERN SALOON SHOP) அமைக்க ஒரு பயனாளிக்கு ரூபாய் 1.50 இலட்சம் வீதம் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1.50 கோடி நிதியுதவி வழங்கப்படும்.**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, தொழில் வாய்ப்புகளை உருவாக்கி, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில், சிகைதிருத்தும் தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கு நவீன சிகைதிருத்தும் அழகு நிலையம் (MODERN SALON SHOP) அமைப்பதற்கு நிதியுதவி வழங்கப்படும்.

இதன்படி, தகுதியான 100 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 1.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 1.50 கோடி நிதியுதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் நவீன உபகரணங்கள் மற்றும் மேம்பட்ட வசதிகளுடன் கூடிய சிகைதிருத்தும் நிலையங்களை அமைத்து, தங்களின் வருமானத்தை உயர்த்திக் கொண்டு, தொழிலில் வளர்ச்சியை அடைய வழிவகை செய்யும் வகையில் தகுதியான 100 பயனாளிகளை தேர்வு செய்து டாப்செட்கோ மூலம் கடனுதவி ரூபாய் 5.00 இலட்சம் வழங்கப்படும். இப்பயனாளிகளுக்கு பின்நிகழ்வு மானியமாக பயனாளி ஒருவருக்கு ரூபாய் 1.50 இலட்சம் வீதம் மொத்தம் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1.50 கோடி நிதியுதவி வழங்கப்படும்.

## 12. சென்னையில் ஒரு புதிய சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதி தொடங்கப்படும்.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் வசிக்கும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையில் உள்ள மாணவியர்கள் சென்னையில் உள்ள கல்லூரிகளில் பயின்று வருகின்றனர். இவர்களுக்கு போதுமான சமூக நல விடுதி வசதிகள் இன்மையால், மாணவியர் நலன் கருதி கல்வியினை இடைவிடாது தொடர்வதற்கு ஏதுவாக, 100 கல்லூரி மாணவியர்கள் பயன்பெறும் வகையில் உணவு மற்றும் தங்கும் வசதியுடன் சென்னையில் ஒரு சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதி ரூபாய் 54 இலட்சம் செலவில் புதிதாக தொடங்கப்படும்.

## 13. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட 5000 தேய்ப்பு பெட்டிகள் (Iron Boxes) வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட நடப்பாண்டில் 5000 பயனாளிகளுக்கு தேய்ப்புப் பெட்டிகள் (Iron Boxes) வழங்கப்படும்.

இதன்படி, கரியால் இயங்கும் தேய்ப்பு பெட்டிகள் 2500 எண்ணிக்கையிலும், திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டிகள் 1500 எண்ணிக்கையிலும் மற்றும் மின்சாரம் மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டிகள் 1000 எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் 5000 தேய்ப்புப் பெட்டிகள் (Iron Boxes) ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**14. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட 10,000 மின் மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் சுயதொழில் திறனை மேம்படுத்தி அவர்களின் குடும்ப வருமானத்தை உயர்த்தும் நோக்கில், தையல் தொழிலில் ஈடுபட்டுள்ள 10,000 பயனாளிகளுக்கு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்கப்படும். இதற்கென ரூபாய் 6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 15. மிகப்பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கென மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல வாரியம் (MBC Welfare Board) அமைக்கப்படும்.

மிகப்பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கென மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல வாரியம் (MBC Welfare Board) நடப்பாண்டில் ரூபாய் 3 கோடி செலவில் புதியதாக உருவாக்கப்படும்.

இவ்வாரியத்தில் மிகப்பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தகுதியான நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவார்கள். பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு பிற தொழிலாளர் நல வாரியங்களில் வழங்கப்படும் உதவிகளைப் போன்று பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.

**16. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 11 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ரூபாய் 4.50 கோடி மதிப்பீட்டில் 19 கூடுதல் வகுப்பறைகள், 12 கூடுதல் கழிப்பறை வசதிகள் மற்றும் 1 ஆய்வகம் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 11 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு போதிய வசதிகளை செய்து தந்து, அப்பகுதி மாணவர்கள் கல்வி கற்க ஏதுவாக, 19 கூடுதல் வகுப்பறைகள், 12 கூடுதல் கழிப்பறை வசதிகள் மற்றும் 1 அறிவியல் ஆய்வகம் ஆகிய உட்கட்டமைப்பு பணிகள் ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**17. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ரூபாய் 5.00 கோடி நிதியில் சிறப்பு பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.**

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இயங்கி வரும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் கட்டடத்தின் ஸ்திரத்தன்மையை பாதுகாக்கும் வகையில், இம்மாவட்டங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் முதற்கட்டமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் "சிறப்பு பழுது மற்றும் பராமரிப்பு பணிகள்" திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

## 18. சூப்பர் கிளின் – சூப்பர் கேம்பஸ் (Super Clean–Super Campus) திட்டம் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பள்ளிக் கல்வித்துறை மூலம் செயல்படுத்தப்படும்.

பள்ளிகளில் தூய்மையான மற்றும் பாதுகாப்பான கற்றல் சூழலை உறுதி செய்வது என்பது, மாணாக்கர்கள் தரமான கல்வி பெறுவதற்கும், அவர்களின் நலனுக்கும் இன்றியமையாததாகும். தற்போது அரசுப் பள்ளிகளில் தொழில்முறை தூய்மைப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான ஒருங்கிணைந்த நடைமுறை இல்லாத நிலையை கருத்தில் கொண்டு, சூப்பர் க்ளீன் சூப்பர் கேம்பஸ் (Super Clean Super Campus) திட்டத்தினை அரசு செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இயங்கி வரும் உயர்நிலை மற்றும் மேல்நிலை கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் தினசரி

தூய்மைப் பணிகள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி வளாகங்களுக்கு 24 மணி நேர பாதுகாப்பு ஆகியவைகள் பள்ளிக்கல்வித்துறை மூலம் செயல்படுத்தப்படும்.

**வே. சம்பத் குமார்**
**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**